Registered as a Newspaper

NIRU TUITION CENTRE
Kondavil.
A/L 88
புதிய பகுதி ஆரம்பம்
பௌதிகம்: சௌந்தி
இரசாயனம்: செல்வா
தூய, பிரயோக) கணிதம் A.பத்மநாதன்
விலங்கியல்: ஞானேந்திரன்
தாவரவியல்: பாலா
ஆரம்பம்: 6 - 1 - 87
செவ்வாய் (மாலை 4.00)

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

NIRU TUITION CENTRE
Kondavil.
கல்வி ஆண்டு 87
O/L 4ஆவது பிரிவு
ஆண்டு; 9, 8, 7, 6
3ஆவது பிரிவும்
ஆரம்பம்: 5-1-87
திங்கள்: 8.30
* திறமைமிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
* கடந்தகால பெறுபேறுகள் நிசழ் ஆண்டிற்குச் சான்றுகும்.

சுடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 18 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 1 (2-1-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 32

# குடாநாட்டை வட்டமிட்டு நோட்டம் விட்டார் லலித்!

## கொழும்பு திரும்பிய பின் ஒருமணிநேர ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜனவரி 2

புதுவருட தினமான நேற்று, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி யாழ்ப்பாணக் குடாநாட்டை விமானத்தில் பறந்தவண்ணம் நோட்டமிட்டார்.

அவருடன் முப்படைகளின் கூட்டுத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்கவும் கூட இருந்தார்.

கொழும்பு திரும்பிய அமைச்சர், அங்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் குடாநாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஒருமணிநேரம் ஆலோசனை நடத்தினர்.

ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் யாழ் குடாநாட்டு சிவில் நிர்வாகத்தைப் பொறுப்பு ஏற்கப் போவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்து இருந்தது அல்லவா?

அதைத் தொடர்ந்து தான் அமைச்சர அத்துலத்முதலியின் நேற்றைய யாழ் விமான பயணம் அமைந்தது என்று கொழும்பில் கூறப்பட்டது.

நேற்றுப்பகல் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் கூட்டுத்தளபதியும் விமானம் ஒன்றில் தாழப்பறந்து நோட்டமிட்டனர்.

கொழும்பு திரும்பிய அமைச்சர் தனது அதிகாரிகளுடன் ஒருமணித்தியாலத்துக்கு மேலாக யாழ் குடாநாட்டு விடயங்களைக் கலந்தாலோசித்தார்.

அரசுப் பேச்சாளர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில் --

யாழ். குடாநாட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்பர் சீபிளேன் நகரை வட்டமிட்டன

யாழ்ப்பாணம், ஜன 2

யாழ்ப்பாணத்தில் நேற்று ஹெலி, பொம்பர், சீபிளேன் ஆகியவை சுற்றி வட்டமிட்டன.

நேற்றுப் பகல் 12 மணி அளவில் ஹெலிக்கொப்டர் வந்து நகரின் முக்கிய பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டது.

அதன்பின்னர் சீபிளேனும்; குண்டுவீச்சு விமானமும் (பொம்மர்) வட்டமிட்டன.

இதன் காரணமாக நகரில் நேற்று பதற்றம் நிலவியது.

பதினைந்து நிமிடங்களாக வட்டமிட்டுத் திரிந்த இந்த விமானங்கள் பலாலி நோக்கி பறந்து சென்றன. (இ-10)

## கொழும்பில் கைதான தமிழர்விடுதலை

கொழும்பு, ஜன. 2

கொழும்பு மாநகரில் புதன்கிழமை மாலை பொலீஸாரால் கைது செய்யப்பட்ட சுமார் 25 தமிழ் இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்,

புத்தாண்டு அன்று பட்டாசு வெடிகளுடன் குண்டுகளையும் வெடிக்க வைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தே, இத்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

(இ-எ-1)

## நேற்றும் ஹெலி தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன 2

நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்திற்கு புதிய விமானங்கள் வந்தபோது பாதுகாப்பு வழங்கு முகமாக ஹெலிக்கொப்டர் தாக்குதல்

(4-ஆம் பக்கம் பார்க்க)

மின்னல் செய்தி

## ரெலோ தலைவருக்கு கொடுத்த 'டொபி'யில் நஞ்சு?

சென்னை, ஜன. 2

சென்னை நகரில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் ரெலோ தலைவர் செல்வம் தளபதி பொபி ஆகியோருக்கு நேற்று வழங்கப்பட்ட ''டொபி'' களில் நஞ்சு கலந்திருந்ததா?

சென்னையில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று இப்படிச் சந்தேகம் எழுப்பியுள்ளது.

உண்ணா விரதமிருக்கும் இருவரிடமும் ''டொபி'' யாவது சாப்பிடும்படி கேட்டு ஒரு பெண் 'டொபி'கள் கொடுத்தாராம்.

செல்வமும், பொபியும் அவற்றை வாங்க மறுத்துவிட்டனர்.

அவரின் உதவியாளர்கள் 'டொபி' களை வாங்கி உரிய முறைப்படி பரீட்சித்துப் பார்த்தபோது நஞ்சு கலந்து இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

இப்படி சென்னைச்செய்தி தெரிவித்தது. (இ-ஐ-எ)

## செல்வம், பொபி உண்ணாவிரதம் நீடிப்பு குறித்து சிதம்பரம் கவலை

சென்னை, ஜன. 2

ரெலோ தலைவரும் தளபதியும் தனது வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிடாதது குறித்து இணை அமைச்சர் ப. சிதம்பரம் நேற்றுக் கவலை தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட ரெலோ போராளிகளை விடுவிக்கும்படியும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைத் திருப்பித் தரக் கோரியும் ரெலோ தலைவர் செல்வமும் தளபதி பொபியும் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவது தெரிந்ததே.

இவர்களுடன் உண்ணாவிரதம் இருந்து வந்த 72 போராளிகள் இணை அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

ஆனால் செல்வமும், பொபியும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். (இ-எ)

## சிவில் நிர்வாகம் குறித்து லலித் கருத்து

கொழும்பு, ஜனவரி, 2

''சொந்த சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானிப்பின் அது சந்தேகமில்லாமல் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும்.''

''அவர்கள் சமாதான யோசனைகளை ஏற்கவில்லை. என்பதுதான் அதன் அர்த்தம்''--

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார் என்று ஆகாஷவாணி நேற்று இரவு அறிவித்தது.

ஆகாஷவாணியின் கொழும்பு செய்தியாளர் மஜீர்தாருக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

## ஹெலி சுட்டபோது சிறுமி தலை சிதறியபடி விழுந்தார்

### மரண விசாரணையில் தகவல்

காங்கேசன்துறை,ஜன 2

மேலே 'ஹெலி' சுட்டபடி இருந்ததால் பயத்தினால் வீட்டின் பிளாற்றின் கீழே மறைந்து நின்றபோது அருகில் பயங்கர வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. இறந்தவர் தலை சிதறி இரத்தம் பெருகிய நிலையில் கீழே விழுந்தார்.

கடந்த புதன்கிழமை குரும்பசிட்டியில்ஹெலித் தாக்குதல் காரணமாக இறந்த அரசகேசரி ஐமுனா என்னும் 14 வயதுச் சிறுமியின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது சகோதரி ஜானகி மேற்கண்டவாறு கூறினார்.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா மரண விசாரணையை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடத்தினர்.

இறந்தவரின் சகோதரி சாட்சியமளித்தபோது மேலும் கூறியதாவது.

சம்பவதினம் 10-30 மணி அளவில் நானும் எனது இறந்த சகோதரியும் வீட்டில் நின்றோம். மேலே ஹெலி சுட்டபடி இருந்ததால் வீட்டின் பிளாற்றுக்குக் கீழே மறைந்து நின்றோம்.

அப்போது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நாம் நின்ற இடத்திற்கு அருகில் பயங்கர வெடிச் சத்தம் ஒன்று கேட்டது

உடனே சகோதரி தலை சிதறிய நிலையில் இரத்தம் பெருக கீழே விழுந்தார்.

பாதுகாப்புப் படையினர் ஹெலியிலிருந்து சுட்டதால் இவர் மரணமாக நேர்ந்தது.

இப்படி அவர் கூறினார்.

பிரேத பரிசோதனை செய்த தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை சாட்சியமளிக்கையில் இறந்தவரின் தலையின் இரு கன்னப் பகுதிகளிலும் இரண்டு காயங்கள் காணப்பட்டன. அத் துவாரங்களூடாக மூளை வெளிவேறியிருந்தது.

உட்பக்கமாக சன்ன எலும்புகளிலும் இரு துண்டுகள் காணப்பட்டன.

தலையில் பெரும் பகுதி சிதறி மூளையும் பெரிதும் சேதமடைந்திருந்தது

அதிர்ச்சி இரத்தப் பெருக்கு காரணமாக மரணம் சம்பவித்தது (4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

02-01-1987
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6. 30 முதல் 8 00 வரை

ராகுகாலம்:
11.00 முதல் 12.30வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

மூச்சந்தி முனி



நோட்டம் விட்டவர் ஏதாவது நோண்டிற, சீண்டிற நோக்கத் தோடையோ......?!

## பெருமளவு முட்கம்பி வெற்றுச் சாக்குகள் கப்பலில் வந்து இறங்கின!

கொழும்பு, ஜன. 2

பெருமளவில் முட்கம்பிகளும் வெறும் சாக்குகளும் கப்பல் ஒன்றில் காங்கேசன்துறை வந்து சேர்ந்தன.

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் இருந்து இன்னொரு கப்பலில் சில தினங்களுக்கு முன்னர் இவை ஏற்றப்பட்டன.

இரண்டாயிரம் மெட்ரிக்தொன் நிறையான சுமார் 40,000 றோல் முட்கம்பி, சுமார் 2,000 பேல் சாக்குகள் இப்படி மாற்றி ஏற்றப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இவைகளை ஏற்றிக்கொண்ட அந்தக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகம் வந்து சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## முஸ்லிம் இளைஞர் சூடுபட்டு மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 2

திருகோணமலை சாம்பல்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் 11 ஆம் கட்டையடியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் முஸ்லிம் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

மேலும் மூவர் காயமடைந்தனர். (இ-10)

## தலை சிதறிய சிறுமியை கண்டதும் மயங்கி விழுந்து இறந்த சிறுவன்

காங்கேசன்துறை,ஜன.2

சுகவீனமுற்றிருந்த எமது மகனை சம்பவதினம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு கூட்டி வந்து வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்தேன். அப்போது அண்மையில் ''ஹெலி'' சுட்டபடி இருந்ததால் எனது மகன் பயத்துடன் இருந்தார். பின்பு ஹெலி சுட்டு காயமடைந்த சிறுமி ஒருவரை வைத்திய சாலைக்கு கொண்டு வந்தபோது அதனைக் கண்டு மகன் மயக்கமுற்றார். உடலில் வியர்வை ஏற்பட்டது. உடனடியாக சிகிச்சை அளித்தும் அவர் இறந்துவிட்டார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இறந்த 11 வயது மாணவன் இராமநாதன் கிஷோக்குமாரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரின் தாயார் செல்லம்மா மேற்கண்டவாறு கூறினார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி. திரு நா. தம்பிராசா முன்னிலையில் நடந்த இம்மரண விசாரணையில் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை சாட்சியமளிக்கையில்:- இறந்தவர் ஏற்கனவே இருதய பலவீனத்தால் பாதிக்கப்பட்டிருந்திருக்கலாம். இந்த நிலையில் அதிர்ச்சி தரும் சம்பவங்களை நேரில் கண்டதால் மரணம் சம்பவித்திருக்கலாம் என்றார்.

விசாரணை முடிவில் நோய் காரணமாக மரணம் சம்பவித்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டது

தெல்லிப்பழை கிராம சேவையாளர் எஸ். நடராசா சாட்சிகளை ஆஜர் செய்தார். (இ-68)

## ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கப் போராளிகள் 30 பேர் காரைதீவில் கைது!

அம்பாறை, ஜன 2

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 30 பேரை, தமிழீழ விடுதலைப் புலிகள் புதன்கிழமை மாலை கைதுசெய்தனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவுக் கிராமத்தில் இடம்பெற்றது.

புதன்மாலை 5 மணியளவில் 2 வாகனங்களில் அட்டண்ணபள்ளம் என்ற இடத்தில் இருந்து வந்த புலிகள் காரைதீவுக்குள் புகுந்து ஈ. பி. ஆர். எல். எவ்; முகாமைச் சுற்றி வளைத்தனராம்.

தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையே பலத்த மோதல் இடம்பெற்றது. மோட்டோ ஷெல் தாக்குதலும் நடந்தது.

இறுதியில் புலிகள் ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் சுமார் 30 பேரைப் பிடித்து வாகனங்களில் ஏற்றிச் சென்றனர் என்று அறியவந்தது.

### அரச ஊழியர் சுற்று நிருபம் வாபஸ்!

கொழும்பு, ஜன 2

அரச ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்களை கோரி விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்தை அரசு வாபஸ் வாங்கிக் கொண்டது.

இச் சுற்றுநிருபத்தின் படி அரச ஊழியர்கள் தங்கள் குடும்பங்கள் பற்றிய தனிப்பட்ட விவரங்களை அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டிருந்தனர்.

அந்த சுற்றுநிருபமே இப்போது வாபஸ் வாங்கப்பட்டது (இ-எ-1)

### ● வங்காலை கடற்கரையிலும் 17 பேர் கைது!

படகு ஒன்றில் வங்காலைக் கடற்கரையில் வந்திறங்கியதாகக் கூற படும் 17 ஈ. பி. ஆர். எல் எவ். போராளிகளை, தமிழீழ விடுதலைப்புலிகள் பிடித்துக்கொண்டனர்.

தகவல் கிடைத்த புலிகள் அங்கு பதுங்கியிருந்து இவர்களைப் பிடித்தனர் என்று தெரியவருகிறது.

ஏற்கனவே புலிகளிடம் சரணடைந்த ஈ. பி.ஆர், எல் எவ். போராளிகளில் 30 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர் என்று தெரிகிறது. இவர்களில் இரண்டு பேர் பெண்கள்

## வவுனியாவில் பெற்றோல் தாராளம்

யாழ்ப்பாணம், ஜன. 2

வவுனியாவில் பெற்றோல் நேற்று தாராளமாக விநியோகிக்கப்பட்டது.

யாழ் நகரிலும், வவுனியா நகரிலும் வடபகுதிக்கான பெற்றோல் விநியோகம் இடைநிறுத்தப்படும் என்ற வதந்தியில் எதுவித உண்மையும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் வவுனியாவில் தாராளமாக இருப்பதாகவும் வேண்டிய அளவு பெற்றுக்கொள்ளலாம் எனவும் வவுனியா மாவட்ட எரிபொருள் விற்பனை முகவரான பி. எம். அப்துல்லா உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-10)

### எரிபொருளுடன் வந்த லொறிகள் திருப்பி அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 2

அநுராதபுரத்தில் இருந்து வட பகுதிக்கு எரிபொருள் ஏற்றிவந்த ஆறு லொறிகள் ஆயுதப் படையினரால் மதவாச்சியுடன் மறித்து திருப்பி (4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் குண்டு வெடிப்பு தொடர்கிறது! நேற்றும் ஒருவர்பலி!!

சென்னை, ஜன. 2

திருவல்லிக்கேணி பொலீஸ் நிலையம் அருகே சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பெண்ணின் கணவரும் இன்னொரு பெண்ணுமாக இரண்டு பேர் காயமடைந்தனர்.

கீழே கிடந்த பார்சல் ஒன்றைக் கணவன் கையில் எடுத்து மனைவியிடம் கொடுத்தார். மனைவி பார்சலைப் பிரித்துப்பார்க்க முயற்சித்தார். அப்போது பெரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது.

தமிழ் நாட்டில் கடந்த ஒரு மாதகாலமாக இடம் பெற்றுவரும் குண்டு வெடிப்புக்களில் இது எட்டாவது சம்பவமாகும்.

இச்சம்பவங்களில் இதுவரை மூன்று பேர் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து அனாதரவாகக் கிடக்கும் பார்சல்களை எடுக்க வேண்டாம் என்று பொலீஸ் கமிஷனர் டபிள்யு. தேவாரம் கேட்டிருக்கிறார்.

இதனிடையில் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணிகள் இல்லாத பெட்டி ஒன்றில் வெடி மருந்துகள் கொண்ட பார்சல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

வாணியம் பாடி ரயில் நிலையத்தை ரயில் வந்தடைந்த போது இது கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

**தேவை**

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு படப்பிடிப்பாளர் தேவை. படப்பிடிப்புடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் தெரிந்தவராக இருக்க வேண்டும் விளம்பர எண்: 42, மே/பா. உதயன், த.பெ. எண்: 23, யாழ்ப்பாணம்;

**விற்பனைக்கு**

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்


# தீவுப்பகுதி படகுச் சேவை சீர்குலைகிறது

யாழ்ப்பாணம் ஜன். 2 தீவுப்பகுக்கான படகுச்சேவை சீர்குலைவால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

குறிகட்டுவான் நெடுந்தீவுக்கானபடகுச் சேவையில் இதுவரை அலையரசி குஜநினி, மணிமேகலை ஆகிய படகுகள் அரசால் சேவையில் ஈடுபத்தப்பட்டு வந்தன.

இயந்திரப்பழுது காரணமாக அலையரசி, குமுதினி சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. பழுதான படகுகளை காரைநகர் கொண்டு சென்று திருத்துவதற்கு பெருந்தெருக்கள் திணைக்களம் இதுவரை எந்தஒரு முயற்சியையும் எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது

படகுகளை அரசஅதிபர் பொறுப்பேற்று அவற்றைத்திருத்தி சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென செயலகத்தில் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் (உ-5)

## பொலிஸாருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம்

யாழ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிங்களப் பொலிஸார் பலருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளது

புத்தாண்டில் விடுமுறைக்காக விண்ணப்பித்து விடுமுறை வழங்கப்படாதவர்களுக்கே இவ்வாறு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளதாம்.

இவர்களைப் பரிசோதிக்க யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து வைத்திய குழு ஒன்று நேற்று யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்றது. (இ-10)

## சமாதானத்தின் குரல்

'சமாதானத்தின் குரல்' என்ற கலை நிகழ்ச்சியை அகில இலங்கை ரீதியில் புதிய ஆண்டில் தேசிய இளைஞர்சேவைகள் மன்றம் நடத்த உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் சிங்கள. தமிழ், முஸ்லிம் கலைஞர்களுடன் மேற்கு ஜேர்மன் நாட்டு, நடன கலைநிகழ்ச்சி கலைஞர் பேராசிரியர் ஹண்ட்ஸ் டெயிட் சுல்வாவும் கலந்து கொள்வார்.

## வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு

வேலணை கமநல சேவை நிலையப் பகுதியில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் இப்பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு விண்ணப்ப படிவங்களை வழங்கி வருகின்றனர். (இ-167)

# தமிழரே அதிகம் ஆனால் உதவி அரசாங்க அதிபர்களாக சிங்களவர்கள்

யாழ்ப்பாணம், ஜன 2 தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் திருமலைமாவட்டத்தில்உதவி அரசாங்க அதிபர்களாக சிங்களவர்களே அதிகமாக உள்ளனர்.

2 லட்சத்து19 ஆயிரம் மக்கள் வாழும் திருமலையில் 74 ஆயிரம் தமிழருக்கு2தமிழ் உதவி அரசாங்க அதிபர்களும், 71 ஆயிரம் முஸ்லீம்களுக்கு 3 முஸ்லீம் உதவி அரசாங்க அதிபர்களும் 73 ஆயிரம் சிங்களவர்களுக்கு 4 சிங்கள உதவி அரசாங்க அதிபர்களும் உள்ளனர்.

இத்தகவலை தம்பலகாமம் பிரஜைகள் குழுச் செயலளேர் திரு. ம. க. கிருஸ்ணகோபால் தெரிவித்தார். (இ-5)

# இளவாலையில் சிறுவர்தின விழாவும் ஒளி விழாவும்

இளவாலை, ஜன.2 ஒளிவிழாவும் சிறுவர் தினவிழாவும் ஒன்று சேரக் கொண்டாடப்படுவது நம் சிறுவரில் பெற்றோர் கொள்ள வேண்டிய அக்கறைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

இளவாலை புனித யாகப்பர் ஆலயப்பங்கின் சிறுவருக்கான கலை நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தபோது அருள் திரு எம். ரீ. பற்றிக் அடிகளார் மேற்கண்டவாறு கூறினர்.

ஆலயப் பங்கின் டொன்பொஸ்கோ வாலிப கழகம் மாசில்லாத மாதா யுவதிகள் கழகம் இரண்டும் இணைந்து மேற்படி விழாவை நடத்தின.

விளையாட்டில் வெற்றி பெற்றோருக்கு அடிகளார் பர்சில்களை வழங்கினர்.

கலை நிகழ்ச்சிகள் பல இடப்பெற்றன.

'இறைவாக்கின் நிறைவேற்றம்' என்னும் நாடகம் யுவதிகள் மன்றத்தினரால் நடத்தப்பட்டது.

டொன் பொஸ்கோ கழக செயலரின் நன்றியுரையுடன் விழாநிறைவேறியது. (இ 48)

## மண்டைதீவு கடலில் பாரிய கப்பல்

யாழ்ப்பாணம், ஜன. 2 மண்டைதீவு இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் கடற்படையினரின் பெரிய கப்பல் ஒன்றின் நடமாட்டம் புதனன்று காணப்பட்டது

இதன் காரணமாக கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற அனைவரும் திரும்பி வந்தனர். (இ-10)

# செய்திக்கொத்து

## அடிகளார் வெள்ளிவிழா

மன்னார், ஜன. 2 மன்னார் - வவுனியா மறைமாவட்ட குரு முதல்வரும், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத் தலைவருமான வண. அன்ரனி சேவியர் குரூஸ் அடிகளார் தன்னை குருப்பிரசாதி ஆக அர்ப்பணித்த 25 ஆவது வருட வெள்ளிவிழாவை அண்மையில் கொண்டாடினார்.

சேவியர் குரூஸ் அடிகளார் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (இ-எ)

## 12 பாடசாலைகளில் 1 ஆசிரியர்மட்டுமே

தாளையடி, ஜன 2 பருத்தித்துறை கிழக்கிலுள்ள 19 அரசாங்க பாடசாலைகளில் 12பாடசாலைகள் ஒரு ஆசிரியர் மட்டும் கடமையாற்றும் பாடசாலைகளாக உள்ளன.

இப்பகுதியிலுள்ள இடை நிலைப்பாடசாலைகள். பலவற்றில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கும் ஆசிரியர்கள் இல்லை. (இ-144)

## 100 மாணவருக்கு உதவும் திட்டம்

சாவகச்சேரி, ஜன. 2 அண்மைக் காலத்தில் வட பகுதியில் இடம் பெற்ற வன் செயல்கள் காரணமாக குடும்பத்தில் தலைவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 100 பாடசாலை மாணவர்கள் தமது கல்வியைத் தொடர உதவும் திட்டமொன்றை அறவழிப் போராட்டக்குழு செயல்படுத்தவுள்ளது.

இத் திட்டத்தில் தம் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்புவோர் பாடசாலை செல்பவரின் பிறப்புச் சாட்சிப் பத்திரம், பாடசாலை அதிபரின் உறுதி மொழிக் கடிதம், குடும்பத் தலைவரின் இறப்புப் பத்திரம், மாணவரின் புகைப்படம் என்பவற்றுடன் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் குழுப்பணிமனையில் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (இ-31)

## 'பூவரசு' வெளியீடு

தாளையடி. ஜன 2 வவுனியா மாவட்டத்திலுள்ள பூவரசங்குளம் மாகாவித்தியாலயத்தில் ஆண்டுவெளியீடான "பூவரசு" சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

பூவரசங்குளம் கொத்தணி அதிபர் திரு. க. சிவாசகம் தலைமையில் பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. (இ-144)

## சனசமூகநிலைய மரம் நடும் இயக்கம்

யாழ்ப்பாணம் ஜன. 2 புங்குடுதீவு 6 ஆம்வட்டாரத்தில் இருப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தினர்மரம் நாட்டும் இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர்,

இந்த இயக்கத்தை வெற்றிகரமாக்க மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜா பெருமளவு மரக்கன்றுகளை அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றார். (இ-எ)

## மரம் நடும் விழா

யாழ்ப்பாணம் ஜன.2 கோண்டாவில் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க வளவில் கடந்த ஞாயிறு மரம் நடும்விழா இடம்பெற்றது

தொழில் அதிபர் திரு க. கனகராசா, நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு விநியோகித்தார்.

சிறப்பு விருந்தினராக கிராமசேவையாளர் திரு ச. கனகலிங்கம் கலந்து கொண்டார். (இ-எ)

## இலவச பாட புத்தகம்

கரவெட்டி ஜன. 2 வவுனியா மாவட்ட பாடசாலைக்குரிய இலவச புத்தகங்கள் அனைத்தும் வவுனியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநயகத்தினால் கொழும்பு பாடநூல் பிரசுரத்திணைக்களத்தில் இருந்து லொறி மூலம் வவுனியா கொண்டுவரப்பட்டுள்ளன. (இ-70)

# இராமப்புற ஆஸ்பத்திரிகளுக்கு மேலதிக நிதி

யாழ்ப்பாணம். ஜன. 2 கிராமப்புற வைத்திய சாலைகளின் வசதிகளுக்கென மேலதிக நிதி இந்த ஆண்டு ஒதுக்கப் பட்டுள்ளது.

யாழ் மவட்டஅபிவிருத்திச் சபை ஒதுக்கீட்டிலிருந்து அரச அதிபர் மேலதிக நிதியை ஒதுக்கியுள்ளார்.

சாவகச்சேரி, வேலணை வைத்திய சாலைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கென தலா 4லட்சம் ரூபாயும் இளவாலையில் புதிதாக ஆஸ்பத்திரி கட்ட 3ட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்றவருடம் தொல்புரம், சங்கானை, தெல்லிப்பளை, ஏழாலை, கோண்டாவில், பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரிகளின் வசதிகளைப் பெருக்க 15லட்பம் ரூபாவை அபிவிருத்திச்சபை ஒதுக்கியிருந்தது என அபிவிருத்திச்சபை பிரதம கணக்காளர் திரு.கே. எம்.ரஜேந்திரன் தெரிவித்தார். (இ-5)

## அராலியில் விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், ஜன. 2 அராலி கிழக்கு முதலாம் வட்டாரத்தில் வசிக்கும் மக்களுக்கென 'அம்பாள் விழிப்புக்குழு' ஒன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது,

அப்பகுதி மக்கள் தமது பிரச்சினைகளையிட்டு இவ் விழிப்புக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு விழிப்புக் குழுத் தலைவர் திரு மு. சின்னத்தம்பி தெரிவித்துள்ளார். (இ-5)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

**விக்ஞ** டியூசன் சென்ரர் 52, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்

DAY CLASSES

புதிய பிரிவு 2

ஆரம்பம்: ஜனவரி 5

காலை 8-00 மணி

**விக்ஞ** டியூசன் சென்ரர் 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்

10 வது வருடசேவை

O/L, Day Classes

காலை 8.30

9, 8, 7, 6 வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது. மாலை 2.30

ஆரம்பம்: ஜனவரி 5

பிரயாண ஒழுங்குகள்

நோர்வே ★ கனடா

ஜேர்மனி ★ லண்டன்

சிங்கப்பூர் ★ சவூதிஅரேபியா

ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் பிரயாணம் மேற்கொள்வதற்கு நாடுங்கள்.

**TRI STAR TRAVELS**

No. 6, Model Market, Jaffna. Telephone: 23831


# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# முதலாளித்துவ அரசுக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்

## இடதுசாரிகளுக்கு நவ சமசமாஜக்கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன 2 இந்த நாட்டில் உள்ள இடது சாரிச் சக்திகள் அனைத்தும் முதலாளித்துவ அரசை தூக்கி எறிவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றுபட வேண்டும்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் ஒன்பதாவது ஆண்டு விழாவை முன்விட்டு யாழ். மாவட்ட செயலாளர். திரு ஆ. க. அண்ணாமலை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இந்த நாட்டில் உள்ள சகல இடதுசாரி சக்திகளையும், ஒரே அணியில் திரட்டி முதலாளித்துவ அமைப்பை முற்றாக முறியடித்து ஒரு சோசலிச சமுதாயத்தை அமைப்பதையே முழு மூச்சாகக் கொண்டு கடந்த 9 ஆண்டுகளாக நவ சமமாஜ கட்சி செயற்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தை பொறுத்தவரையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை முதன்முதலாக அங்கீகரித்து அவர்களுக்கு ஒரு தாயகம் உண்டு என்பதையும் ஏற்றுள்ளது.

இன்று கூட தம்மை இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டு சில இடதுசாரி கட்சியினர். தமிழ் மக்களின் தாயகம் என்ற கொள்கை ஒரு உணர்ச்சி வசப்பட்ட எண்ணமாகும் என்று கூறிவருகின்றார்கள்.

இத்தகைய இடதுசாரிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக கூறுவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

நவ சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு நடைபெற்ற சகல போராட்டங்களிலும் தனது முழு சக்தியையும் கொடுத்துள்ளது.

1978 இல் கொண்டுரப்பட்ட அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக கறுப்புக்கொடி போராட்டம் நடத்தியமைக்காக கட்சியின் பொதுச் செயலாளர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

1979இல் தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச்சட்டத்துக்கு எதிராக சவப்பெட்டி ஊர்வலம் நடத்தியமைக்காக கட்சித் தோழர்கள் யூ.என் பி. அரசால் தாக்கப்பட்டதுடன். அவர்கள் மீது சட்நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

எந்தவிதமான விடுதலைப் போராட்டமென்றாலும் சரி ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் பாதையில் முன்னெடுக்கப்படுவதே சாலச் சிறந்ததாகும்.

ஏனென்றால் முதலாளித்துவத்தின்கீழ் எந்த எந்தவொரு சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு கிடைக்காது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10)

### இனப்பிரச்சினைச் சிக்கல்:

# தமிழ் எம். பிக்கள் இல்லாததே காரணம்

## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 2 நாடாளுமன்றத்தில் தமிழ் எம்பிக்கள் இல்லாததினால்தான் இன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படமுடியாமல் உள்ளது

ஆகவே பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி தமிழ் எம்பிக்கள் தெரிவாக அரசு வழிவிட வேண்டும்

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மீண்டும் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் பிரபாகரன் போன்ற தீவிரவாதிகளும் நாடாளுமன்றம் வரக்கூடும்.

இதை விடுத்துயோசனை மேல் யோசனைகளைச் சமர்ப்பித்துக்கொண்டே இருப்பதால்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது இப்படி அவர் சொன்னார். (உ-ஐ-எ)

# பிரதம தபால் அதிபரின் சேவைக்குப் பாராட்டு

அட்டாளைச்சேனை பிரதம தபால் அதிபர் திரு இ. திருநாவுக்கரசுவின் சேவையைப் பாராட்டி அட்டாளைச் சேனைப் பிரதேச சபைசிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

நெருக்கடியான இக்கால கட்டத்தில் மக்களின் தபால் தேவைகள் நிதி சம்பந்தமான கொடுப்பனவுகள் முதலியன குறித்து மிகத்திறமையாக, நேர்மையாக நிறைவேற்றி வந்திருக்கிறார். அதற்காக திரு. திருநாவுக்கரசுவை இச் சபை பாராட்டுகிறது.

இப்படி சபை நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் பிரதிகள் தபால் மா அதிபர், அம்பாறை மாவட்டத் தபால் அத்தியட்சகர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப் பட்டுளளன.

திரு. திருநாவுக்கரசு இம்மாதம் 1ஆம் திகதி தொடக்கம் சுன்னாகம் தபால் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது (உ-எ)

## அடகு வைத்தோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 2 ஓய்வூதியம், சம்பளம் போன்றவற்றை மக்கள் வங்கியில் இருந்து பெறுபவர்கள் தமது திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு மாற்று ஏற்பாடுகளைச்செய்து கொள்ளுமாறு அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

மக்கள் வங்கியில் இருந்து அடகு நகைகள் மீளப் பெறும் வரை மறியல் போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது.

எனவே பொதுமக்கள் எமது போராட்டத்திற்கு இயன்ற ஒத்துழைப்பை வழங்க வேண்டும்என்றும் அடகு வைத்தோர் சங்கம் கேட்டுள்ளது. (இ-10)

## மக்கள் முகம்

### கணேசன் ஐக்கிய நாணயச் சங்கம்

யாழ்ப்பாணம். ஜன 2. காரைநகர் வலந்தலை கணேசன் ஐக்கியநாணய சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது.

இதன் தலைவராகதிரு. நா. கந்தையாவும் காரியதரிசியாக திரு. வே குமாரசாமியும் தனாதிகாரியாக க. சாம்பவமூர்த்தியும் செயற்குழு உறுப்பினராக திரு சடாட்சரம் திரு. இ. இரத்தின சபாபதி திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் (இ)

### இந்தியாவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

நாக்பூர், ஜனவரி 2 இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் நாக்பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான புதனன்று இந்திய அணி இன்னிங்ஸாலும் 106ஓட்டங்களாலும் இலங்கை அணியைத் தோற்கடித்தது.

# வங்கி செயலிழப்பு; மக்கள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 2 கடந்த இரண்டுவாரங்களுக்கு மேலாக யாழ்- மக்கள் வங்கிகள் செயலிழந்து இருப்பதன் காரணமாக பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ்- கோட்டை தபால் அலுவலகத்திலும் பண முடக்கம் ஏற்பட்டுள்ளதாம்.

இதன் காரணமாக காசுக் கட்டளைகள், தபாற் கட்டளைகள் போன்றவற்றைக் தபால் அலுவலகத்திற்கு மாற்ற கொண்டு வருபவர்கள் அங்கு பணம் இல்லாததன் காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

மக்கள் வங்கி செயற்பட ஆரம்பித்த பின்னரே கோட்டை தபால் அலுவலகத்திற்கு வருமாறு பொது மக்களுக்கு தபாலக அதிகாரி ஒருவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (உ-10)


**The Magic Touch**

வழங்கும்

மனையியல் கண்காட்சி

3-1-87, 4-1-87 நடைபெறவிருந்த கண்காட்சி

தவிர்க்கமுடியாத காரணங்களால்

10-1-87, 11-1-87இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

மங்கா சோமசேகரன்

கோட் றோட்,

(ஆரம்ப நீதிமன்றம் முன்பாக)

மல்லாகம்.

**A/L 87**

**PAPER CLASSES**

(SAT & SUNDAYS)

ஆரம்பம்: 03 - 01 - 1987

9.20 - 10.30 - Chemistry - Mr. Thillainathan

10 30 - 11 30 - Physics - Mr. Varnam

11.30 - 12 30 - Botany - Mr. Kugatharan

12.30 - 1.30 - Zoology - Mr. Naganathan

**New Master Institute**

B. M. C. LANE, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தொடர்ந்து தியானம் செய்தால் மனம் உறுதி பெற்று விடும்.

— அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - நிதானம் - நடுநிலைமை

இல,15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 02-01-1987 த. பெ இல 23

## ஆலயங்கள் அவமதிப்பு

தம்பலகாமத்தில் உள்ள ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தை இராணுவத்தினர் அசுத்தம் செய்து அசிங்கப்படுத்துகின்றனர். கோயில் கோபுரத்தில் 'சென்றி' நிற்கும் சிப்பாய்கள் அங்கு சிறுநீர் கழித்து அருசை செய்கின்றனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் சிலையை அகற்றி விட்டார்கள். அது மட்டுமா? விநாயகர் சிலை இருந்த மூலஸ்தானத்தில் புத்தர் சிலையை வைத்திருக்கிறார்கள். கட்டாயப் 'பிரதிஷ்டை' செய்திருக்கிறார்கள்.

இந்து ஆலயங்களை அவமதிக்கும் — அவற்றின் புனிதத் தன்மையை - கெடுக்கும் வம்புத்தனம் பற்றிய செய்திகள் இப்போது அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களை சேதப்படுத்தியும், சிரழித்தும், துவம்சப்படுத்தியும் அரசாங்கக் கூலிப் படைகள் பண்பாட்டுக் கொலை புரிந்தமை குறித்து இப்பத்திகளில் ஏற்கனவே கண்டித்திருந்தோம்.

தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் முயற்சியின் ஓரங்கமே தமிழ்ப் பகுதிகளில் வணக்க ஸ்தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களும், செய்யப்படும் அவமதிப்புகளும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

குறிப்பாக இந்து ஆலயங்கள் சேதப் படுத்தப்படுவதன் நோக்கமே அதுதான். சைவமும் தமிழும் உயிரும் உடலும் போன்றவை. ஒன்றோடு மற்றது இணைந்தது. தமிழை அழிப்பதானால் சைவத்தை அழிக்க வேண்டும். சைவத்தை அழிப்பதானால் தமிழை அழிக்க வேண்டும் என்று எதிரிகள் எண்ணுமளவுக்கு அவை ஒன்றித்தவை.

தமிழர்களை இன ஒழிப்புச் செய்வதோடு தமிழையும் சைவத்தையும் ஈழத்தில் வேரறச் செய்துவிட வேண்டும் என்பதே சிங்கள— பௌத்த பேரினவாதத்தின் கோரத்தனமான நோக்கம். அப்போதுதான் இலங்கை முழுவதையும் சிங்கள— பௌத்த நாடாக்க முடியும் என்பது அதன் உலுத்தத்தனமான இலட்சியம்.

மதம் என்பது மனிதனின் மன நம்பிக்கையில் உதித்தது அவன் தன்னை விட மதத்துக்கும், கடவுளுக்கும் மகோன்னதமான மதிப்பையும், மரியாதையும் கொடுக்கிறான்.

மதம் மனிதனின் வாழ்க்கை நெறிமுறையாகவும் அமைந்திருக்கிறது அதனால் சமயமும் வாழ்க்கையும் ஒன்றுகிவிடுகின்றன. மதங்கள் யாவும், வேறு திசைகளால் பாய்ந்து சென்று ஒரே கடலில் சங்கமிக்கும் ஆறுகள் போன்றவை.

ஆனால் ஒவ்வொருவனும் தான் பின்பற்றும் மதத்தில் அலாதி நம்பிக்கையும், மதிப்பும் வைத்துக் கொள்கிறான். அது மத உணர்வாகும்.

மத உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டியது. அது நியாயத்துவமான தேவை. ஆனால் அந்த உணர்வு, வெறியாக மாறினால் மனிதன், மனிதனாக இல்லாமல் அரக்கனாகிறான்.

இந்த அரக்கத்தனமே மற்றவர் மதத்தை நிந்தனை செய்வதற்கும், தூஷிப்பதற்கும், சிரழிப்பதற்கும் தூண்டு கோலாகின்றது. மற்றவரை மதமாற்றம் செய்வதற்கும், அடுத்த மதத்தை அழிப்பதற்கும் அடி எடுத்துக் கொடுப்பதும் அதுவே.

மற்றவர்களின் மத உணர்வைப் புண்படுத்துதலும், அவர்கள் போற்றித் துதித்து வணங்கும் கடவுளர்களை கீழ்த்தரமாக தூஷிப்பதும், அவமதிப்பதும், அவர்கள் புனிதமாகக் கருதும் ஆலயங்களைச் சிரழிப்பதும் பாவம் சேர்க்கும் அக்கிரமங்கள்.

தமக்குள்ள மத உணர்வு மற்றவர்களுக்கும் உண்டு என்பதை மறந்துவிடும் மிருகத்தனத்தை என்னென்பது.?

சிங்கள — பௌத்த பேரினவாதத்தின் இந்த மிருகத்தனத்துக்கு தர்மிஷ்டம் பேசும் அரசும் துணை போகிறது என்பதை நிரூபிக்க சான்று தேவையா? கோயில்களைச் சேதமாக்கிவிட்டு அவற்றுக்குள் போராளிகள் நின்று தாக்கினார்கள் என்று காரணம் கற்பிக்கும் அரசல்லவா இது?

மேடைகளில், இந்து சமயக் கோட்பாடுகளுக்கும் பௌத்த சமய நெறிகளுக்கும் உள்ள ஒற்றுமை, ஒருமைப்பாடு குறித்துப் பெரிதாகக் கூறும் அதே அரசியல், மத "நடிகர்கள்" தான் திரை மறைவில் சிங்கள — பௌத்த பேரினவாதத்தை தூண்டுகிறார்கள் என்பதில் சந்தேகம் என்ன?

ஓர் இனத்தையோ மதத்தையோ அழிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதை அவர்கள் உணரத் தவறிவிடுகிறார்கள். தாம் செய்யும் பாவத்தை தாமே அனுபவிக்க நேரிடும் என்ற பௌத்த "வினைய" வைக்கூட அவர்கள் மறந்துவிடுகிறார்களே!

இது ஆதிகாலம் அல்ல. நவீன காலம். நலிந்தவர்களையும், எண்ணிக்கையில் குறைந்தவர்களையும் காப்பாற்ற உலக அபிப்பிராயம் என்ற பாதுகாப்பு அரண் உண்டு என்பதை அந்த "நடிகர்கள்" மறந்து நடப்பதும் அறியாமையா?

# கரீபியன் தீவில் ஹொட்டலில் தீ!

## 90பேர்பலி 100பேர்காயம்

சான்ஜுவன், ஜன.1 கரீபியன் தீவான போர்டோ ரிக்கோவில் நேற்று ஹொட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீப்பதிற்கு 90 பேர் பலியானார்கள். 100 பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தீவில் தங்களது விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்த அமெரிக்கார்களும் கனேடியர்களுமே இறந்தவர்களாவர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 69பேரது நிலைமை கவலைக்கிடமானது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அனேக வெடிச்சத்தங்களைக தொடர்ந்து ஹொட்டலில் அடித்தளத்தில் உள்ள 'பொயிலர்' வெடித்துச் சிதறியதாகவும் அதனாலேயே தீ பரவத் தொடங்கியதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. (ஒ)

**வெளி உலகில்**

## சென்னையில் குண்டு

சென்னை ஜன.1

சென்னையில் இன்று காலை அதிசக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் பெண் ஒருத்தி காலமானார்.

திருவல்லிக்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அருகே இந்த சம்பவம் நிகழ்ந்தது.

## தென்ஆபிரிக்கா மீது ஸிம்பாப்வே தடை

ஹராரே, ஜன.1

இன ஒதுக்கலை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ஒரு சம்பவமாக விரைவிலேயே தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத்தடைகளை ஸிம்பாப்வே விதித்திடும்

இவ்வாறு ஸிம்பாப்வே பிரதமர் றொபார்ட் முகாபே அறிவித்தார்.

தென் அபிரிக்காவிற்கு எதிராய் மட்டானதடைகளை விதிப்பதாதன இத்திட்டம் சென்ற ஆகஸ்ட் மாதத்தில் லண்டனில் நடைபெற்ற காமன் வெல்த் உச்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

பல்வேறு அம்சங்களையும் ஒருங்கிணைப்பதான பொறுப்பை ஏற்கும் அலுவல் அணியின் பொறுப்புகள் இம்மாத இறுதியில் செயல்படத் தொடங்கியதும் ஸிம்பாப்வேயின் பொருளாதார தடை அறிவிக்கப்படும். (ஒ)

## மது விலக்கு

சென்னை. ஜன.1

தமிழ் நாட்டில் பகுதி அளவிலான மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

இதனால் வேலை இழக்கும் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2ஆயிரம்ரூபா வழங்கப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள 16ஆயிரம் சாராயக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

எனினும் உத்தரவு பெற்ற ஆயிரத்தி அறுநூறு கடைகள் மூலம் இந்தியத்தயாரிப்புவெளி நாட்டு மது பானங்கள் தொடர்ந்தும் விற்பனை செய்யப் படும். (ஒ)

## அலஸ்காவில் பறக்கும் தட்டு

அலஸ்கா, ஜன.1

அலஸ்கா பகுதியில் மீண்டும் பறக்கும் தட்டுகள் காட்சியளித்துள்ளன.

ஜப்பானிய ஏயர்லைன்ஸ் விமானி ஒருவர் நேற்று இவற்றைக் கண்டதாக தகவல் வெளியிட்டார்.

பறக்கும் தட்டுக்களின் வட்டம் ஒன்று சுமார் இருபது அடியாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். இவற்றிலிருந்து மிகவும் பிரகாசமான ஒளி வெளிவந்ததாம். (ஒ)

# தமிழர் தகவல் நிலையம் பற்றி சுப்பிரமணிய சுவாமி தகவல்

புதுடில்லி, ஜன.1 இலங்கை அரசின் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதே புதுடில்லியில் அமைக்கப்படவிருக்கும் இலங்கைத் தமிழர் தகவல் நிலையத்தின் நோக்கம்.

இப்படி ஜனதா பிரமுகர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

தமிழரின் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை இலங்கை அரசு தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறது. தமிழருக்கு உரிமை இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

தமிழர் பிரச்சினையை சீக்கியத் தீவிரவாதத்துடன்ஒப்பிட்டு இலங்கை பேசி வருகிறது. இதை முறியடிக்க புதுடில்லி தமிழர் தகவல் நிலையம் உழைக்கும்.

இந்தநிலையத்தின் தலைவராக செல்வி லக்ஷ்மி நாகநாதனும் உபதலைவராக டாக்டர் விக்னேஸ்வராவும் இருக்கின்றனர். டாக்டர் விக்னேஸ்வரா இலங்கை அரசின் கூட்டுத்தாபனம் ஒன்றில் இயக்குநராகக் கடமையாற்றியவராம்.

புதுடில்லியில் இலங்கை தமிழர் தகவல் நிலையம் அமைப்பது குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் டிக்ஸிற் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

(ஒ-ஐ-எ)

## லக்னோநதியில் விஷம் கலப்பு

லக்னோ, ஜன 1

வட இந்திய நகரமான லக்னோவில் உள்ள நீரை மக்கள் குடிக்கக் கூடாது என அரசாங்க அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்—

உத்திரப்பிரதேசத்தில் உள்ள கோமதி நதியில் சீனித்தொழிற்சாலை ஒன்றினதும் வடிசாலையொன்றிலிருந்தும் பெருமளவு நஞ்சுத்தன்மை வாய்ந்த இராசாயன பொருட்கள் கலந்துவிட்டதினால் சுமார் எட்டுமைல் தூரத்திற்கு அந்த நதிகறுப்பாகக்காட்சி அளிக்கின்றது.

மீன் விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது.

(ஒ)

## அந்தமான் தீவிற்கு அனுப்பப்படும் பைல்கள்

புதுடில்லி, ஜன. 1

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமான தகவல்கள் அடங்கிய பைல்கள் எல்லாம் அந்தமான் தீவில் விடுமுறையைக் கழித்துவரும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நேராக அனுப்பிவைக்கப்படுகின்றன.

இம்மாதம் 7-ஆம் திகதிதான் பிரதமர் காந்தி அந்தமான் தீவை விட்டுப் புறப்படுகின்றார்.

நேராக பெங்களூர் வந்து இந்திய விஞ்ஞானிகள் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வார்.

அதன்பின்னரே திரு. காந்தி புதுடில்லி திரும்புவார்.

அதற்குப் பின்னரே இலங்கைப் பிரச்சினைபற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் புதுடில்லி திரும்பிய பின்னர்தான் இணை அமைச்சர் குழு சென்னை செல்லும் திகதி நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது

(ஒ-ஐ-எ)

## கோதாவரி ஆற்றில் நிலவாயு கண்டுபிடிப்பு

ஹைதராபாத் ஜன. 1

ஆந்திரப்பிரதேசத்தில் கோதாவரி ஆற்றின் வடிநிலப்பகுதியில் கரைக்கு அப்பால் நிலவாயு கண்டறியப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின்போது தினசரி 98ஆயிரம் கனமீட்டர் நிலவாயு பெறத்தக்க வகையில் மேற்கு கோதாவரிமாவட்டத்தில் எண்ணெய் களத்தில் நிலவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணா கோதாவரி வடிநிலப் பகுதிகளில் கரைக்கப்பால் உள்ள இரண்டு எண்ணெய் கிணறுகளில் ஏற்கனவே இந்த வகையான நிலவாயு கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

(ஒ)

# பெருமைப்படக் கூடிய வரலாற்றுக்காலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்

## கிட்டு அளித்த பேட்டி

— க. இரத்தினராஜசிங்கம் —

தமிழ் மகன் என்று சொல்லி பெருமைப்படக் கூடிய வரலாற்றுக்காலம் ஒன்று வெகுவிரைவில் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டு மேற்கண்டவாறு கூறினார்.

திரு.கிட்டுவை உதயன் செய்தியாளர் பேட்டி கண்டார்.

உங்களுடையதனிப்பட்ட கொள்கை என்ன என்று திரு.கிட்டுவிடம் உதயன் செய்தியாளர் கேட்ட போதே திரு கிட்டு மேற் கண்டவாறு சொன்னார்.

திரு. கிட்டு மேலும் சொன்னதாவது,

இஸ்ரவேல் யூதர்கள் தமக்கென ஒரு தாயகத்தை ஏற்படுத்தியது போல தமிழீழம் என்ற தாயகத்தையும் நாம் பெறவேண்டும்.

தமிழர்களுக்குஒருநாடு உண்டு என்று உலகறியச் செய்ய வேண்டும் இதுவே எமது ஆசை.

இப்படி திரு. கிட்டு கூறினார்.

கேள்வி: 1986-ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சிபற்றி தெரிவிக்க முடியுமா?

பதில்: தமிழீழ விடுதலைப் புலிகளின் போரட்டம் உலகறிந்த போராட்டமாக மாறி தற்பொழுது அதன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரையில் எமதுபோராட்டம்மூலம் அரசைப் படுதோல்வி அடையச் செய்துளோம்.

பயங்கரவாதிகள் என எம்மை வர்ணித்த ஸ்ரீலங்கா அரசாங்கம் எம்மைப் போராளிகள் என்று அங்கீகரித்துள்ளது.

ஆயுதப்படையினர்மீது தாக்குதல் நடத்தி... ஒடிமறையும் நாம் இன்று அதே அரசாங்கத்துடன் ஒரே மேசையில் இருந்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

தமிழர் பிரச்சினைக்கு ஆயுதம் மூலமே தீர்வு காண முடியும் என்றும் எந்தவித உரிமையும் வழங்க முடியாது என



கிட்டு

வும் கூறிவந்த அரசாங்கம் இன்று மாகாணசபை வரை படியிறங்கி தமிழீழத்தை அங்கீகரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக நாம் நடத்திவந்த போராட்டங்களில் 1986 ஆம் ஆண்டு அடம்பனில் நடைபெற்ற போராட்டமே முதன்மை பெற்றதாகும்.

பதினாறு சிப்பாய்களை கொன்று குவித்து ஒன்பது சடலங்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்து சரித்திரம் படைத்தோம்.

கேள்வி: இலங்கை அரசின் மாகாணசபைத் திட்டம்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இத் திட்டம் போராளிகளால் நிராகரிக்கப்பட்டது. தமிழரது தாயகம், தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, மலையக மக்களின் குடியுரிமை ஆகிய நான்கு கோட்பாடுகளின் அடிப்படையில் மாத்திரமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட முடியும்.

இந்த நான்கு கோட்பாடுகளில் ஒன்றுதானும் சமரசத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

எனவே இத் திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதி பலிக்காது.

கேள்வி: உங்கள் போராட்ட காலத்தில் மறக்க முடியாத சம்பவம் பற்றி கூற முடியுமா?

பதில்: கடந்த வருடம் மன்னார் மாவட்டத் தளபதி விக்ரரும், மூதூர் மாவட்டத்தளபதி கணேஸும் வீர மரணமடைந்தது மறக்க முடியாத துயரச் சம்பமாகும்.

இறந்த இவர்கள் எனது அருமை நண்பர்கள்.

தமிழீழப் போராட்டத்தில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்திய இவர்களின் இழப்பு தமிழீழ போராட்டத்தில் பல பல திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார்த் தளபதி விக்ரரின் மரணம்தான் இலங்கை அரசின் படியிறக்கத்திற்கும் கைதிகள் பரிமாற்றத்திற்கும் வழி வகுத்தது.

தென் இலங்கைச் சிங்கள மக்களுக்கு எமது போராட்டத்தின் உணர்வுகளை வெளிப் படுத்தியது.

இதே வேளை கைதிகள் பரிமாற்றத்தின் போது எமது மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் அருணாவை ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து மீட்டெடுத்தது புலிகள் வரலாற்றின் பெரும் சாதனையும், மறக்க இயலாத சம்பவமுமாகும்.

கேள்வி: ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி உங்களிடம் பேச விருப்பம் கொண்டுள்ளாரே?

பதில்: லலித் அத்துலத்முதலியை எந்த வகையிலும் எம்முடன் பேசுவதற்கு அழைக்க மாட்டோம்.

கடந்த சில காலங்களுக்கு முன்னர் கூட பிரதான வீதியில் வங்கிக் கட்டடம் ஒன்றில் இருந்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என எம்மை அழைத்தார் லலித். ஆனாலும் நாம் அவர் அழைப்பை ஏற்கவில்லை.

(இ-10)

## ஆசிரியர்களுக்கு விஷேடமுற்பணம்

மானிப்பாய், ஜன.2

1987 ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கு விழா முற்பணம், விஷேட முற்பணம் ஆகியவற்றை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் விண்ணப்பம் கோரியுள்ளது.

விஷேட முற்பணங்கள் 28.02.87 க்குப் பின்னர் வழங்கப்பட மாட்டாது. விஷேட முற்பணம், விழா முற்பணம் ஆகியவற்றுக்கு தனித்தனியே ரூபா 500 யை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

(இ-90)

**பொய்யாமொழி**



குறள்:

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப் படும்.

பொருள்:

இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந் நிலை பிறவித்துன்பத்தை ஒழிக்கும்; இல்லையாயின் (பிறவித்துன்பம் மாறி மாறி வந்து) நிலையாமை காணப்படும்.

# தர்மம் செய்ய செல்வம் வரும்

அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளாத ஒருவன் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுப்பதும், இறப்பதுமாகிய இந்தத் துக்ககரமான ஸம்ஸாரத்தில் அவதியுறுகிறான். ஆயினும் ஒருவன் மனிதப்பிறவி எடுத்ததற்குக் காரணம் அவனது பூர்வ ஜன்ம புண்ணியங்கள் என்றே கூற வேண்டும்.



உலகில் உள்ள ஒவ்வொருவனும் தனக்கு எப்போதும் சுகம் கிடைக்க வேண்டும் என்றே விரும்புவான்.

வளர்ப்பது அதனுடைய பழத்துக்காக, ஆயினும் அதோடு கூட குளுமையான நிழலும், சுகந்தமும் எப்படித் தாமாகவே நமக்குக் கிடைக்குமோ அப்படித்தான் தர்ம விஷயங்களில் ஈடுபட்டிருப்பவனுக்குச் செல்வம் முதலியவை தாமாகவே வரும்.

எனினும் அஞ்ஞானியான ஒருவன் என்ன கர்மாக்கள் செய்தாலும் அதனால் அவன் இந்த துக்க சாகரத்தைக் கடக்க முடியாது. ஆத்மஞானம் ஒன்றே இதற்கு முடிவாக முடியும். தன்னுடைய உண்மையான ரூபம் என்ன என்பதை விசாரம் பண்ண வேண்டும்.

தான் இந்த மனமும் அல்ல இந்த உடலும் அல்ல, எல்லாவற்றையும் சாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த சைதன்ய சொரூபி தான் நான் என்று தீர்மானமுள்ள ஒருவனுக்கு என்ன துக்கம் தான்வர

ஜகத்குரு சங்கராச்சாரியார்

துக்கம் வருவதை ஒருவனும் விரும்ப மாட்டான்.

சுகத்தைத் தேடி அலையும் மனிதன் லௌகீகமான போகங்களில் ஈடுபடுகிறான். ஆனால் அவனது போகங்களில் இருந்துமெய்யானபேரின்பம் கிடைப்பதில்லை. போலியான சிற்றின்பமும் அதிக துக்கங்களுமே மிஞ்சுகின்றன.

இது தெரியாமல் மேலும் மேலும் லௌகீக போகங்களில் சட்டபட்டுத் தன் ஸ்வல்ப வாழ்நாளையும் வீணடிக்கிறான்.

மனித வாழ்வு நிலையானதல்ல. ஒரு நாஸ்திகனுக்குக்கூட 'நான் என்றுவது இறந்து விடுவேன், இவ்வுடல் அழிந்து விடும்' என்ற நிச்சயம் இருக்கும். ஆகவே அவன் இருக்கின்ற வாழ்நாட்களிலேயே தர்ம விஷயங்களில் ஈடுபட வேண்டும்.

சாத்திரங்கள் கூறுவது போல் நடக்க வேண்டும். இப்படி அவன் தர்ம விஷயங்களிலேயே தன் வாழ்நாளைச் செலுத்துவானேயானால் செல்வம் முதலியன தாமாகவேஅவனை வந்தடையும்.

நாம் ஒரு மாமரம் நட்டு அதனைப் பேணி

முடியும்?

அந்த உண்மையான 'நான்' தான் 'ஆத்மா' 'சச்சிதானந்த ஸ்வரூபி' என்கிறோம். சுக துக்கங்கள் பற்றி நாம் யோசித்துப் பார்த்தோமானால் மனிதனுடைய துக்கத்துக்குக் காரணம் அவன் பிறவி எடுத்ததேயாகும் என்பது தெரியும்.

இவ்விதமான பிறப்புக்குக் காரணம் அவனது கர்மாக்களேயாகும் இந்தக் கர்மாக்களுக்கும் காரணம் ராகத்வேஷ மோஹங்கள் என்னும்

**ஞானக்கதிர்**

தோஷம். இதற்குக் காரணம் என்னவென்றால் அவனுடைய அஞ்ஞானமேயாகும்.

இவ்வித அஞ்ஞானத்தைப் போக்குவதே நம் வாழ்க்கையின் லட்சியமாக இருப்பதை விட்டுக் கேவலம் லௌகீகப் போகங்களிலேயே வாழ்நாளை வீணடித்தால் நம்மைக் காட்டிலும் இழிந்த பிறப்பான ஒரு பிராணியின் ஜன்மாவே சிரேஷ்டம் என்றுகூறுவது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road, JAFFNA.
(Near Wellington Junction)

# உதயன்

02 01 1987 வெள்ளிக்கிழமை

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல- 353 C, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

முப்படைத் தாக்குதலை அடுத்து

# தொண்டமானாறு மக்கள் அவலம்

## பிரசைகள் குழு அரச அதிபரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 2

கடந்த நவம்பர் பதினோராம் திகதி இடம்பெற்ற முப்படைகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து தொண்டமானாறு பகுதியில் வாழும் மக்களுக்கு நேர்ந்த அனர்த்தங்கள் குறித்து வல்வெட்டித்துறை பிரசைகள் குழுவின் தொண்டமானாற்றுக் கிளை யாழ் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளது

பிரசைகள் குழு, அரச அதிபரிடம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்திருப்பதாவது;

ஆயுதப் படையினரின் இத் தாக்குதலினால் இப்பகுதி மக்கள் முழுவதும் அகதிகளாயுள்ளனர்.

விவசாயிகளும் மீனவர்களும் தொழில் இழந்து, அன்றாட வாழ்வையே நடத்தமுடியாத நிலையில் உள்ளனர்.

வீடுகளில் உடைமைகளைக் கைவிட்டுவிட்டே மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

உடைமைகளைப் போய் எடுத்து வரமுடியாத நிலை நிலவுகிறது

சுமார் 700 மாணவர்களின் படிப்புப் பாழாகின்றது. மகாவித்தியாலயம் காலவரையறை இன்றி மூடப்பட்டு விட்டது.

தொண்டமானாறு பகுதியில் ஓர் இந்துக் கோயில் கூட இயங்குவது இல்லை.

இப்படி பிரசைகள்குழுவின் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

### இந்து மத குருமாருக்கு உதவி

தொண்டமானாறு பகுதியில் இந்து ஆலயங்கள் செயலிழந்திருப்பதால் நிர்க்கதிக்காளாகியுள்ள குருமார் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படவுள்ளது.

இதற்காக ஐயாயிரம் ரூபா ஒதுக்கப்படும் என்று யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் தன்னைச் சந்தித்த வல்வெட்டித்துறை பிரசைகள்குழு தூதுக்கோஷ்டியில் தெரிவித்தார்.

தொண்டமானாறுப் பகுதியில் சந்நிதி, வைரவர், சோணேஸ்வரம் ஆலயங்களில் தினசரி பூசைகள் நடைபெறுவதில்லை; ஆலயங்கள் மூடப்பட்டு உள்ளன. இப் பகுதியில் ஓர் ஆலயம் கூட தற்போது இயங்குவது இல்லை.

இப்படி அரச அதிபரிடம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்கண்ட நிதி உதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் விட்டுச்சென்ற வீடுகளில் உள்ள உடைமைகளை எடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருடன் தொடர்புகொள்வதாகவும் தெரிவித்தார். (இ-எ)

### மட்டக்களப்பில் புத்தாண்டு ஆராதனை

மட்டக்களப்பு, ஜன. 2

மட்டக்களப்பு — திருகோணமலை ஆயர் டாக்டர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் நடந்த புத்தாண்டு ஆராதனையில் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புத்தாண்டு அமைதியாக இடம்பெற்றது. அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

(இ-எ-21)

# வவுனியா - கொழும்பு ரயிலில் கொள்ளையிடும் 'டிப்டொப்' ஆசாமிகள்

கொழும்பு, ஜன. 2

வவுனியா—கொழும்பு ரயிலில் செல்லும் தமிழ் பயணிகளிடம் கொள்ளையிடும் 'டிப்டொப்' ஆசாமிகள் கோஷ்டி ஒன்று பொல்காவலைப் பகுதியில் இயங்குவது குறித்து தகவல் வெளிவந்துள்ளது.

வவுனியாவில் இருந்து செல்லும் ரயில் பொல்காவலையை அடைந்ததும், இந்த 'டிப்டொப்' ஆசாமிகள் ஏறிக்கொள்கின்றனராம்.

பொல்காவலைக்குப் பிறகு வரும் சிறு ரயில் நிலையங்களில் ரயில் தரிக்கும் சமயங்களில் இந்த ஆசாமிகள், பயணிகளிடம் உள்ள கைப்பை மற்றும் அகப்பட்டதை வாரிச் சுருட்டிக்கொண்டு மறைந்து விடுகின்றனராம்.

இந்த ஆசாமிகள் நீளக் காற்சட்டை, சட்டை அணிந்து மற்றவர் சந்தேகப்படாத மாதிரி நைஸாக பழகிய பின்னர்தான் கொள்ளையில் ஈடுபடுகிறார்கள். (இ-எ)

# விடுவிக்கப்பட்ட சிப்பாய்களை சந்திக்க விஜே மறுப்பு

## தேடி வந்தோரைத் திருப்பி அனுப்பினார்

யாழ்ப்பாணம், ஜன 2

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட இரண்டு ஸ்ரீலங்கா சிப்பாய்களைச் சந்திக்கவும் அவர்களின் விருந்துபசாரங்கள், கூட்டம் முதலியவற்றில் கலந்து கொள்ளவும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு. விஜயகுமாரணதுங்க மறுத்துவிட்டார்.

இரண்டு சிப்பாய்களையும் அவர்களின் உறவினர்களையும் நேரில் சந்திக்கவும் திரு. விஜயகுமாரணதுங்க மறுத்துவிட்டார்.

இத்தகவல்களை கட்சிப் பிரமுகர் திரு. என்) எஸ். ஞானரத்தினம் தெரிவித்தார்.

திரு. ஞானரத்தினம் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் கொழும்பு மத்தி அமைப்பாளரும் ஆவர்.

இவர் தற்சமயம் யாழ்ப்பாணம் வந்து இருக்கிறார்.

விடுதலையின் பின்னர் லெப்டினன்டாக அஜித் சந்திரசிரியின் உறவினர்கள் வந்து விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொள்ளுமாறு திரு. விஜயகுமாரணதுங்காவை அழைத்தனர்.

விடுதலையின் பின்னர் அஜித் சந்திரசிரி பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுத்த விதமும் நடந்துகொண்ட முறையும் அதிருப்தி தருவதாக உள்ளன என்று கூறி, அழைப்பை திரு. விஜயகுமாரணதுங்க நிராகரித்து விட்டார்,

இதே போன்று எட்டியாந்தோட்டையில் இருந்து ரைபிள்மன் பண்டார தனது உறவினர்களுடன் இரண்டு பஸ்களில் வந்து திரு. குமாரணதுங்காவை அவரின் வீட்டில் சந்திக்க முயற்சித்தார்.

வீட்டில் சந்திக்க முடியாமல், கட்சி அலுவலகத்திற்கு இவர்கள் சென்றனர். திரு. விஜயகுமாரணதுங்காவை அங்கு சந்திக்க முயற்சித்தனர்.

திரு. குமாரணதுங்க அவர்களைச் சந்திக்க விரும்பவில்லை.

பண்டார விடுதலையான பின்னர் எட்டியாந்தோட்டையில் நடந்த கூட்டம் யு. என். பி. யினரால் ஒழுங்கு செய்யப்பட்டது

தங்களால் அக்கூட்டம் ஒழுங்கு செய்யப்படவில்லை என்று கட்சி அலுவலகத்தில் இருந்த பிரமுகர்களிடம் பண்டாராவின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கூட்டம் ஒன்றை தாம் ஒழுங்கு செய்வதாகவும் கலந்து கொள்ளுபடியும் திரு. விஜயகுமாரணதுங்காவை அவர்கள் அழைத்தனர்.

''உங்களுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை''. என்று திரு. குமாரணதுங்க தமது ஆதரவாளர்கள் மூலம் தெரிவித்தார்.

மேற்கண்ட விவரங்களை திரு ஞானரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சிப்பாய்கள் விடுதலை விஷயமாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவருக்கும் தேசிய அமைப்பாளருக்கும் இடையில் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை என்றும் திரு. ஞானரத்தினம் சொன்னார்.

ஆனால் சிப்பாய்கள் விடுதலையான விதம் கட்சி வட்டாரங்களில் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருந்ததாக திரு ஞானரத்தினம் ஒப்புக்கொண்டார்.

(இ-எ)

### ரங்கநாயகி சின்னலெப்பை பங்குபற்றவில்லை

மட்டக்களப்பு,ஜன. 2

மட்டக்களப்பில் நடைபெற்றவீடமைப்பு ஆண்டு சம்பந்தமான கொண்டாட்டங்களில் அறிவிக்கப்பட்டபடி மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கநாயகி பத்மநாதனும் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் றிஸ்வி சின்னலெப்பையும் கலந்து கொள்ளவில்லை.

மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுநடைபெற்ற பூஜையில் திருமதி பத்மநாதனும் கலந்து கொள்ளவில்லை.

காத்தான்குடி பெரிய பள்ளிவாசலில் நடந்த மத வழிபாட்டில் ஜனாப் றிஸ்வி சின்னலெப்பை கலந்துகொள்ளவில்லை.

அரசு அதிகாரிகள் தான் இவற்றில் கலந்து கொண்டனர்.

### எங்கே?

கோமாரி சென்ற அட்டாளைச் சேனை ஆடு விற்பனை செய்யும் ஒருவர் பன்னிரண்டு தினங்களாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை.(இ-எ-14)

விமானப்படை -- கடற்படை உதவியுடன்

# குடாநாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்

## உயர் அதிகாரி ஒருவர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 2

விமானப்படை, கடற்படை உதவியுடன் விரைவில் யாழ் குடாநாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்.

கூட்டுப்படைகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு கூறினார்.

யாழ் குடாநாட்டில் சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகின்றனர்; செயலகம் நிறுவப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டபோது அந்த உயர் அதிகாரி பதில் அளித்ததாவது:

யாழ் குடாநாட்டில் தொடர்ந்து சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு அவமதிப்பு இடம்பெறுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது.

இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

விமானப்படை, கடற்படை உதவியுடனாவது யாழ் குடாநாட்டை விரைவில் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்.—

இப்படி அந்த உயர் அதிகாரி சொன்னார்.

(இ-ஐ-எ)

குடாநாட்டை---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை குறித்து மிக அவதானமாகக் கவனித்து வருகின்றோம்.

அங்கு இடம்பெற்று வரும் சம்பவங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகின்றோம்.

யாழ். குடாநாட்டை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஏதாவது செய்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது பற்றி அரசுப் பேச்சாளர் விவரிக்கவில்லை.

இதனிடையில் புதன் மாலை 7 மணியில் இருந்து நேற்று மாலை வரை சம்பவங்கள் எதுவும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறவில்லை என்று கூட்டுப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

(அ-ஐ-எ)

மலையகத்தில் கைதாகும் இளைஞர்பற்றி

# 24 மணி நேரத்தில் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும்

கொழும்பு, ஜன. 2

மலைநாட்டில் கைதாகும் தமிழ் இளைஞர் பற்றிய விவரங்கள் 24 மணித்தியாலங்களுள் அவர்களின் பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல உத்தரவிட்டிருக்கின்றார்.

இ.தொ.கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ்.செல்லச்சாமி காணாமற் போனதாகக் கூறப்படும் மலையகத் தமிழ் இளைஞன் தமிழ்ச் செல்வன் பற்றி அமைச்சுச் செயலாளர் திரு. ஆட்டிகலையிடம் முறையிட்டார்.

அப்போது அந்த இளைஞன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது

அதைத் தொடர்ந்தே முன்கண்ட உத்தரவு மலையக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(இ-எ-1)

# மின்மாற்றியில் விழுந்துவெடித்தஷெல் ஒருவர்உயிரை பறித்தது

யாழ்ப்பாணம், ஜன. 2

குளித்துவிட்டு வேலைக்கு வந்துகொண்டிருந்தவர் திடீரென இரத்தம் பீறிட்ட நிலையில் நிலத்தில் விழுந்தார்.

கடந்த 28ஆம் திகதி பரந்தனில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்து பின் மரணமான மாணிக்கம் பத்மநாதனின் மரணவிசாரணையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது

மரண விசாரணையை மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் நடத்தினார்

இவரது சகலன் விகோரி குயின்ரஸ் என்பவர் தாம் நேரில் கண்டதை சாட்சியமாக தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது;

28 ஆம் திகதி காலை குஞ்சுப்பரந்தன்கமத்தொழில் பயிற்சி நிலைய வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

அப்பொழுது காலஞ்சென்றவர் அடுத்த வீட்டுக்கு சென்று குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தார்.

திடீரென வந்த ஷெல் ஒன்று எமது வேலைத்தலத்தில்இருந்து 300 யார் தூரத்தில் உள்ள மின் மாற்றியில் விழுந்து வெடித்தது.

சிதறல்கள் காலஞ்சென்றவரின் தலையைத் தாக்கின.

அப்பொழுது நான் ஓடிச்சென்று அவரைத் தூக்கிவந்த பொழுது மீண்டும் ஒரு ஷெல் அதே இடத்தில் விழுந்து வெடித்தது.

எனினும் நான் மயிரிழையில் உயிர் தப்பினேன்.

அதன் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சகலன் இறந்துவிட்டார் என அறிந்தேன்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

# இந்தி எதிர்ப்பைக் கைவிட கோரிக்கை

சென்னை, ஜன. 2

இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கத்தைக் கை விடும்படி தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியை இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் கருப்பையா மூப்பனார் மீண்டும் கேட்டிருக்கிறார்.

ஒன்றுமில்லாத விஷயத்தை பெரிதாக்கிக் கொள்வதில் பிரயோசனமில்லை என்று திரு. மூப்பனார் திரு கருணாநிதிக்கு நினைவூட்டினார்.

(இ-எ)

எரிபொரு...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டன.

திரும்பிச் சென்ற லொறிகளில் இருந்து எரிபொருளை மீளப்பெறுவதற்கு அநுராதபுர பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இதனை அடுத்து ஆறு லொறிகளும் அங்கு தங்கி நிற்கின்றன.

இது தொடர்பாக யாழ் அரச அதிபர் பிரிகேடியர் வணசிங்கவுடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-10)

ஹெலி---
(1ம்பக்கத் தொடர்ச்சி)

என்றார்.

விசாரணை முடிவில் படையினரின் துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது

[illegible] சேவையாளர், எஸ். [illegible] கனை ஆஜர் செய்தார்.

(இ-68)

# வெளி நாட்டு ஆக்கிரமிப்புக்கு இடமுண்டாம்!

கொழும்பு, ஜன. 2

1987இல் இனப்பிரச்சினை மோதல்கள் மோசமாகி வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கக் கூடும்.

இப்படி 'த ஐலண்ட்' கொழும்பு ஆங்கில நாளிதழின் வியாழன் இதழில் ஆருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோதிடர் சுகததாஸ ஜெயசேகரா '1987 இல் சோதிட பலன்கள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இந்த ஆருடம் கூறப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை மற்றும் தகராறுகளால் அரசின் அதிகாரம், செல்வாக்கு பலவீனப்பட்டுள்ளது.

நாட்டில் பல அரசியல் குழப்பங்கள் இந்த ஆண்டில் ஏற்படும். அரசியல் தீவிர மாற்றங்கள் ஏற்படும். பழம்பெரும் அரசியல்வாதியின் உயிருக்கு ஆபத்து உண்டு.

இப்படி புதவருட பலனில் கூறப்பட்டுள்ளது.

(அ-எ)

### தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபம்

அம்பாறை, ஜன 2

'இது எங்கள் பாடசாலை' என்ற தலைப்பிலான சுற்று நிருபம் கல்முனைப் பகுதி தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு தனிச்சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

இவ் வாரத்தில் பாடசாலைத் தோட்டம். இலவச பாடப் புத்தக விநியோகம் [illegible] மேற்கொள்ளும்படி [illegible] அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

(இ-எ-14)

# காணாமற்போனோர் பற்றி ஆராயக் குழு

## மன்னிப்புச்சபையின் ஆஸி குழு கோரிக்கை

கொழும்பு, ஜன. 2

ஆயுத படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் 'காணாமற் போய்விட்டவர்கள்' என்று கருதப்படுபவர்கள் குறித்து ஆராய சுதந்திர விசாரணைக் கமிட்டி ஒன்றை நியமிக்கும்படி இலங்கை அரசுக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழு விண்ணப்பித்து உள்ளது.

இந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவில் சகல கட்சிகளையும் சேர்ந்த அரசியல் வாதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இக்குழு கூறியிருப்பதாவது;

இலங்கையில் ஆயுத படையினரால் கைது செய்யப்படுபவர்களில் பலர் காணமற் போய் விட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை, மற்றும் சுதந்திர, நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் நாம் அறிகிறோம்.

இப்படிக் 'காணமற் போனவர்கள் அப்பாவி மக்கள் என்பது தெரிய வந்துள்ளது.

நாம் உங்கள் உள்விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. உங்கள் நாட்டில் நிலவும் நெருக்கடி குறித்து அனுதாபப் படுகிறோம்.

இருந்தும் 'காணமற் போனவர்கள்' குறித்து விசாரணை நடத்த சுதந்திர விசாரணைக் குழு ஒன்றை அமைக்கும் படி நாம் கோருகிறோம்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இலட்சியங்களுக்கு இணங்க எப்பக்கத்தில் இருந்தும் வன்செயல்கள் பயன் படுத்தப் படுவதை நாம் எதிர்க்கின்றோம். வன்செயல் பிரயோகிக்கப்படுவதை நியாயப்படுத்த முடியாது.

சுதந்திர சமூகத்தில் வேறுபாடுகளையும் பிரச்சினைகளையும் அமைதியான ஜனநாயக வழியில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

காமன் வெல்த் அமைப்புக்களில் உள்ள ஒரு நாட்டில் மனித, அரசியல் உரிமை மீறல்கள் இடம் பெறுவது ஜனநாயக நாடாளுமன்றப் பிரதிநிதிகள் என்ற முறையில் கவலையைத் தருகிறது.

இப்படி ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றக் குழு கூறியுள்ளது.

குழுத் தலைவர் ரொபர்ட் டிக்னர் எம்.பி, செயலாளரான செனட்டர் கிறிஸ் பப்ளிக் ஆகியோர் இக் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (இ-எ)

நேற்றும்---
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டன.

இடையிடையே ஷெல் தாக்குதல்களும் வயாவிளான், பலாலி இராணுவ முகாம்களில் இருந்து மேற்கொள்ளப் பட்டன,

ஷெல் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 16 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 02 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 16 Second Lane, Power-House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60, N 86 தொலைபேசி 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org